## ஒத்தியல்பு மதிப்பீட்டிற்கான இலங்கை தராதர அங்கீகார சபை - 2013

ஒத்தியல்பு மதிப்பீட்டிற்கான இலங்கை தராதர அங்கீகார சபையின் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானக் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 2005 இன் 32 ஆம் இலக்க ஒத்தியல்பு மதிப்பீட்டிற்கான இலங்கை தராதர அங்கீகார சபை அதிகாரச்சட்டத்தின் iv ஆம் பகுதியின் 29(3) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் நிறுவகத்தின் ஆண்டறிக்கையுடன் சேர்த்துப் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 – 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் சபையின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி சபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு

மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) ஆம் மற்றும் (4) ஆம் உபபிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.
எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.4 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

**2. நிதிக்கூற்றுக்கள்**

**2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களினால் ஏற்படும் தாக்கத்தினைத் தவிர, ஒத்தியல்பு மதிப்பீட்டிற்கான இலங்கை தராதர அங்கீகார சபையின் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

**2.2.1 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுடன் இணக்கமின்மை**

இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியம இல. 01 இன் 48 ஆம் பிரிவின் பிரகாரம் வருமானச் செலவினங்கள் ஒன்றுடன் ஒன்று தீர்க்கப்படலாகாத போதிலும் வருடாந்தம் நடாத்தப்படும் ‘‘உலக ஒத்தியல்பு தினக் கொண்டாட்டம்’’ தொடர்பாக மீளாய்வாண்டின் போது அனுசரணையாளர்களிடமிருந்தும் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்படுவதன் மூலமும் பெறப்படும் வருமானங்களும் ஏற்கப்படும் செலவினங்களும் வெவ்வேறாகக் காண்பிக்கப்படாது ஒன்றுடனொன்று எதிரீடு செய்யப்பட்டு ரூபா 750,980 தொகை தேறிய நட்டமாக கணக்குகளில் காண்பிக்கப்பட்டிருந்தது.

**2.2.2 கணக்கீட்டுக் கொள்கைகள்**

சபையால் அந்நிய செலாவணிக் கொடுக்கல் வாங்கல்கள் மேற்கொள்ளப்படுவதுடன் 2012 ஆம் ஆண்டின் போது ரூபா 5,708 தொகையான அந்நிய செலாவணி பரிமாற்று நட்டம் இனங்காணப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. எனினும், 2013 ஆம் ஆண்டின் போது தயாரிக்கப்பட்ட நிதிக்கூற்றுத் தொகுதியில் கணக்கீட்டுக் கொள்கை 1.11 இன் கீழ் அந்நிய செலாவணி விகிதாசார மாற்றங்களின் தாக்கம் கணக்கீடு செய்யப்பட்டிராமையும் 2014 ஆம் ஆண்டு முதல் கணக்கீடு செய்யப்படுவதாகவும் குறிப்பிடப்பட்டிருந்தது. இதன் பிரகாரம், சபையால் அந்நிய செலாவணி கணக்கீடு

செய்யப்படுவது தொடர்பாக ஒரேவிதமான கணக்கீட்டுக் கொள்கை பின்பற்றப்பட்டிராமை அவதானிக்கப்பட்டது.

## 2.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடன் இணக்கமின்மை

பின்வரும் இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றிற்கான தொடர்பு | இணக்கமின்மைகள் |
|---|---|
| (அ) 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 14(1) ஆம் பிரிவின் 6.5.3 ஆம் பந்தி | கணக்காண்டு முடிவுற்று 60 நாட்களுக்குள் 2013 ஆம் ஆண்டின் வரைவு ஆண்டறிக்கை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) 2006 கொள்வனவு வழிகாட்டல் கோவையின் 3.4.3 ஆம் பிரிவு | வழங்குனர்கள் பதிவு செய்யப்படாது பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களுக்காக ஒரே நிறுவனத்திடமிருந்து உணவுகள் பெற்றுக்கொண்டமைக்காக மீளாய்வாண்டின் போது ரூபா 1,007,325 தொகை செலுத்தப்பட்டிருந்தது. |
| (இ) 2003 ஜுன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் | |
| (i) 8.3.3 ஆம் பிரிவின் (இ) பந்தி | திறைசேரியின் அங்கீகாரம் பெறப்படாது மீளாய்வாண்டின் போது செயற்திறனின் அடிப்படையில் ஊக்குவிப்புப் படி கொடுப்பனவாக ரூபா 114,000 தொகையும் சேமிக்கப்பட்ட வைத்திய விடுமுறையின் அடிப்படையில் ரூபா 447,091 தொகையான படியும் செலுத்தப்பட்டிருந்தன. |
| (ii) 9.14.2 ஆம் பிரிவு | திறைசேரிச் செயலாளரின் அங்கீகாரம் பெறப்படாது முகாமைத்துவ சபையின் அங்கீகாரத்தில் மனித வள முகாமைத்துவம் தொடர்பாக அலுவலகக் கைநூல் ஒன்று 2013 யூலை 01 ஆம் திகதி வெளியிடப்பட்டிருந்தது. |
| (ஈ) 2010 ஒக்டோபர் 11 ஆம் திகதிய எம்ஓஎப்பீ01/2010/01 ஆம் இலக்க நிதி, திட்டமிடல் சுற்றறிக்கை | வெளிநாட்டுப் பயணத்திற்காக கொடுப்பனவு செய்யப்படுகையில் அமையச் செலவினக் கொடுப்பனவு மற்றும் ஒன்றிணைந்த படிக் கொடுப்பனவிற்காக, வெளிநாட்டில் உள்ள ஒரு நாளுக்கு ரூபா 7,500 படி பயணக் கட்டணமும், மதிப்பீட்டுக் கட்டணமாக ஒரு நபருக்கு சார்க் |

நாடுகளுக்கும் ஏனைய நாடுகளுக்கும் முறையே ரூபா 12,000 தொகையும் ரூபா 18,000 தொகையுமாக முகாமைத்துவ சபையால் 2012 நவம்பர் 16 ஆம் திகதி அங்கீகரிக்கப்பட்டிருந்தது. இதன் படி மீளாய்வாண்டின் போது வெளிநாட்டுப் பயணத்திற்காக சுற்றறிக்கைக்கு முரணாக ரூபா 363,000 தொகை மேலதிகமாக செலுத்தப்பட்டிருந்தது.

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2013 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்காக சபையின் செயற்பாடு நடவடிக்கைகளின் விளைவு ரூபா 59,633 மிகையாகக் காண்பிக்கப்பட்டுள்ளதுடன் இதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்காக ரூபா 1,115,619 மிகையானமையால் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் ரூபா 1,055,986 தொகையான வீழ்ச்சி அவதானிக்கப்பட்டது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) தராதர அங்கீகாரம் தொடர்பாக பொது மக்களை அறிவூட்டுவதற்காக மீளாய்வாண்டின் போது இரத்திரனியல் ஊடகங்களுக்கு 2 சமர்ப்பணங்களும் அச்சீட்டு ஊடகங்களுக்கு 2 கலந்துரையாடல்களும் மேற்கொள்ளப்படுவதற்கு வருடாந்த செயற்பாட்டுத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருந்த போதிலும் இதில் ஒரு சமர்ப்பணமோ கலந்துரையாடலேனும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஆ) தராதர அங்கீகாரத்திற்காக விண்ணப்பங்கள் அனுப்பும் நேரடி கணனி முறைமை (Online System) இற்காக மீளாய்வாண்டின் போது ரூபா 350,924 தொகை செலவிடப்பட்டிருந்த போதிலும் கணக்காய்வுத் தினத்தில் தராதர அங்கீகாரத்திற்காக ஒரு விண்ணப்பமேனும் நேரடி கணனி முறைமை மூலம் நிறுவகத்திற்குக் கிடைத்திருக்கவில்லை. நிறுவக வலையமைப்பில் இந் நேரடி முறைமையின் மூலம் தராதர அங்கீகாரத்திற்காக விண்ணப்பங்கள் பெற்றுக்கொள்ளப்படும் இயலுமை தெளிவாகக் காண்பிக்கப்படாமை இதற்குக் காரணமாகியிருந்தது.

**4.2 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) அமைச்சுச் செயலாளரின் அங்கீகாரம் இன்றியும் அரச பங்களிப்பாக எவ்வித தொகையும் அறவிடப்படாது மதிப்பீட்டாளர்கள் பயிற்றுவிப்பு நிகழ்ச்சித்திட்டங்கள் இரண்டிற்காக சபை உத்தியோகத்தர்களை வளப் பகிர்வாளர்களாக ஈடுபடுத்தி பிரதான விரிவுரையாளர்கள் மற்றும் உதவி உத்தியோகத்தர்களுக்காக முறையே ரூபா 240,000 தொகையும் ரூபா 31,900 தொகையும் செலுத்தப்பட்டிருந்தது.

(ஆ) 2009 யூன் 01 ஆம் திகதிய 34(1) ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கை மற்றும் சபையால் வழங்கல் அலுவலகக் கைநூலின் 12.5 ஆம் பந்தியின் பிரகாரம் செலுத்தப்பட வேண்டிய இணைந்த படி ரூபா 500 ஆன போதிலும் ஒருவருக்கு ரூபா 2,000 படி 8 உத்தியோகத்தர்களுக்கு மீளாய்வாண்டின் போது ரூபா 35,600 தொகை அதிகரித்துக் கொடுக்கப்பட்டிருந்தது. இச் செயலமர்வுகளில் கலந்துகொள்வதற்காக நிறுவகத்தின் மூலம் போக்குவரத்து வசதிகள் வழங்கப்பட்டிருந்த போதிலும் வாடகை அடிப்படையில் பெற்றுக்கொள்ளப்பட்ட வாகனங்களுக்காக மீளாய்வாண்டின் போது சபையால் ரூபா 229,952 தொகையான போக்குவரத்துச் செலவினம் ஏற்கப்பட்டிருந்தது.

**4.3 பதவியணி நிர்வாகம்**

2012 நவம்பர் 19 ஆம் திகதிய முகாமைத்துவ சேவைகள் பணிப்பாளர் நாயகத்தின் கடிதத்தின் மூலம் நிறுவகத்திற்கு முதற் தடவையாக உள்ளகக் கணக்காய்வாளர் பதவி ஒன்று அங்கீகரிக்கப்பட்டிருந்ததுடன் 2008 ஒக்டோபர் 30 ஆம் திகதி முதல் வேலை மேவும் அடிப்படையில் நியமிக்கப்பட்டிருந்த ஓர் உத்தியோகத்தர் கணக்காய்வுத் தினமாகிய 2014 ஏப்ரல் 30 ஆம் திகதி வரையும் அப் பதவியின் கடமைகளை மேற்கொண்டிருக்கவில்லை.

**5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

**5.1 பாதீட்டுக் கட்டுப்பாடு**

மீளாய்வாண்டின் பாதீடு செய்யப்பட்ட் மற்றும் உள்ளபடியான வருமானங்கள் செலவினத்துடன் ஒப்பிடுகையில் 2 சதவீதம் முதல் 149 சதவீதம் வரையிலான முரண்கள் காணப்பட்டமையால் பாதீடு பயனுள்ள முகாமைத்துவக் கட்டுப்பாட்டு சாதனமாகப் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## 5.2 ஆண்டறிக்கை சபையில் சமர்ப்பித்தல்

2003 யூன் 02 ஆம் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 6.5.3 ஆம் பந்தியின் பிரகாரம் ஆண்டறிக்கை நிதியாண்டு பூர்த்தியடைந்து 150 நாட்களுக்குள் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் 2012 ஆம் ஆண்டின் ஆண்டறிக்கை இது வரை சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. 2011 இன் ஆண்டறிக்கை 2013 யூலை 23 ஆம் திகதி சபையில் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

## 6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுகள் மீதான குறைபாடுகள் அவ்வப்போது தலைவரின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டன. கீழே குறிப்பிடப்பட்ட கட்டுப்பாட்டுத் துறைகளில் விசேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) பாதீட்டுக் கட்டுப்பாடு
(ஆ) பதவியணிக் கட்டுப்பாடு
(இ) கணக்கீடு
(ஈ) கொள்வனவு நடைமுறை